# සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
# சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
# Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE AND KANDYAN HERITAGE


| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No DSD/HO/07/SD/05/01/SK | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No ........................................ | දිනය<br>திகதி<br>Date 2017.10.23 |

சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்களுக்கும்
மாவட்ட செயலகம்,

**<u>சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாச்சார மற்றும் இலக்கிய தேசிய போட்டிகள் - 2017</u>**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பில் தங்களுக்கு முன் வைக்கப்பட்ட சம இலக்கமும் 2017-05-02ம் திகதியிடப்பட்டதுமான கடிதம் தொடர்பில்

02. அதன் பிரகாரம் சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாச்சார மற்றும் இலக்கிய தேசிய மட்டப்போட்டிகளின் தமிழ் மொழி மூல தேசிய மட்டப் போட்டிகள் 2017-நவம்பர் மாதம் 04ம் திகதி சனிக்கிழமை மு.ப 8.30 மணிக்கும் சிங்கள மொழி மூல தேசிய போட்டிகள் 2017 நவம்பர் மாதம் 11ம் திகதி சனிக்கிழமை மு.ப 8.30 மணிக்கும் பத்தரமுல்லை சுப்பூத்தி தேசிய பாடசாலையிலும் லங்கா சபா வித்தியாலயத்திலும் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் சகல போட்டியாளர்களும் மு.ப 8.00 மணிக்கு முன்னர் பத்தரமுல்லை சுப்பூத்தி தேசிய பாடசாலையில் இயங்கும் நெறிப்படுத்தல் நிலையத்திற்கு அறிக்கையிடல் வேண்டும்.

03. சகல போட்டிகளிலிருந்தும் மாவட்ட மட்டத்திலிருந்து முதலிடத்தினைப் பெற்று தங்களால் ஏற்கனவே எமக்கு முன் வைத்துள்ள பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள போட்டியாளர்களை மாத்திரம் (சிறுவர் கதைகள் தவிர்ந்த ) குறித்த தினத்தில் கலந்துகொள்ளலச் செய்தல் வேண்டும். போட்டிகளை நடாத்துவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் இத் தேசிய போட்டிகள் நடாத்தப்படுவதுடன் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். போட்டிகள் நடைபெற்று 03 வாரங்களுக்குள் மாவட்டங்களுக்கு பெறுபேறுகள் வழங்கப்படும்.

04. போட்டியாளர்களின் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு பிறப்புச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் சமுர்த்தி வங்கி சிறுவர் கணக்கின் பாஸ் புத்தகத்தினை தவறாமல் சமர்ப்பித்தல் வேண்டும்.


1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අධ්‍යක්ෂ (මානව සම්පත්)<br>பணிப்பாளர் ( மனிதவளம்)<br>Director (Human Resource) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director ( Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2871672/2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dg@samurdhi.gov.lk | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | Hot Line:0112-885582 | Hot Line: 011- 2887722 |
| | | Hot Line :0112-889007 | | | |

05. தேசிய மட்டப் போட்டிகளின் பொருட்டு மாவட்ட பெறுபேற்று அட்டவணையின் பிரகாரம் குறித்த போட்டியாளர்கள் தவிர்ந்த மாவட்டத்தின் பிரதிநிதித்துவமானது கீழுள்ளவாறு இருத்தல் வேண்டும். ஒரு மாவட்டத்திலிருந்து போட்டியாளர் தவிர்ந்ததாக கலந்துகொள்ள வேண்டிய உயர்ந்த பட்ச எண்ணிக்கையானது 15 ஆகும்.

| | |
|---|---|
| சமூக அபிவிருத்தி விடயப் பொறுப்பு முகாமையாளர் உட்பட முகாமையாளர்கள் | 02 |
| சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் உட்பட உதவி உத்தியோகத்தர்கள் | 13 |

(மாவட்ட சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் உட்பட போட்டியாளர்கள் கலந்து கொள்ளும் பிரதேச செயலகப் பிரிவுகளின் சமூக அபிவிருத்தி உதவியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.)

06. போட்டிகள் தொடர்பில் கீழுள்ள விடயங்கள் தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்தவும்.

- ❖ போட்டிகள் நடைபெறும் பாடசாலையில் சட்டதிட்டங்கள் மற்றும் நடுவர்களின் ஆலோசனைகளுக்கமைய பெற்றோர்கள் எவரும் பாடசாலை வளாகத்தில் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.
- ❖ மாவட்டங்களிலிருந்து வருகை தரும் சகல போட்டியாளர்களுக்குமுரிய சகல ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளின் பொருட்டு தகுதியான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்துக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.
- ❖ எந்த ஒரு போட்டியாளரும் மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் உத்தியோகத்தர்களின் தலையீடின்றி போட்டிகளில் கலந்துகொள்ளலாகாது.
- ❖ பாடசாலையின் சுகாதாரத்தினைப் பாதுகாத்தல், பாடசாலையின் சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்ற பிரகாரம் பிள்ளைகளை நெறிப்படுத்தும் பொறுப்பு வருகை தரும் உத்தியோகத்தர்களைச் சாரும் என்பதும் குறுநாடகத்திற்காக எடுத்து வரப்படும் சகல போட்டி அலங்கரிப்புக்கள் மற்றும் மேலதிக உபகரணங்களை மீள எடுத்துச் செல்வது தொடர்பில் போட்டியாளர்களை விளக்கமளிக்க வேண்டியதுடன் வருகை தரும் உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் கூடிய கவனத்திளைச் செலுத்துதல் வேண்டும்.
- ❖ மாவட்டத்திலிருந்து போட்டியாளர்களுக்கு மேலதிகமாக கலந்துகொள்வோரின் பெயர்ப்பட்டியலை இணைப்பு இலக்கம் 01 இற்கமைய சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் தனித்தனியாக 2010-10-20ம் திகதிக்கு முன்னர் தவறாமல் அனுப்புதல் வேண்டும்.
- ❖ தலைமைக்காரியாலயத்திலிருந்து மாவட்டங்களை ஒருங்கிணைக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்களை இணைப்பு இலக்கம் 02 இல் காட்டப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் போட்டிகளுக்கு முன்னரும் போட்டிகளின் போதும் குறித்த உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைப்புக்களை செய்துகொள்ளல் வேண்டும்.
- ❖ போட்டிகள் தொடர்பான பொது விபரங்கள் இணைப்பு இலக்ம் 03 இல் காட்டப்பட்டுள்ளது.

07. மேலும் போட்டிகளில் கலந்துகொள்வோருக்கு விடுதி வசதிகள் தேவைப்படின் அச்செலவுகளை போட்டியாளர்களின் போக்குவரத்திற்கான கட்டணங்கள் மற்றும் மேலதிக உபசரணைச் செலவுகளை மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்தினடிப்படையில் மாவட்டத்தின் சமூக அபிவிருத்தி மன்றங்களிலிருந்து செலவு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

08. மேற்படி தினங்களில் தங்களது பங்களிப்பு எதிர்பார்க்கப்படுவதுடன் 3000 இற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொள்ளும் இப் போட்த்தொடரை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் பொருட்டு தங்களதும் பணியாளர்களினதும் ஒத்துழைப்பினை எதிர்பார்க்கின்றேன்.

கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ண
பணிப்பாளர் தலைமையதிபதி.

TRANSLATED BY-M.M.M.JAWHAR(Translater)